# வலயக் கல்வி அலுவலகம் - பட்டிருப்பு

நடுத்தரகால அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - தரம் 2,3,4,5

(G2345) இன் கீழ் முன்னெடுக்கப்படும்

பொருளாதார நெருக்கடிகால மாற்று உபாயக் கல்விச் செயற்றிட்டம் - 1

**(EC22PASEP I)**

மாதிரிப் பரீட்சை – 48 (29.02.2024)

வினாத்தாள் - II

தரம் - 05

**பெயர்:-..............................................** **நேரம்:- 01 மணி 15 நிமிடம்**

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாவது பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்களது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் எல்லாமாக 54 வினாக்கள் உள்ளன.
- விடைகள் எழுதப்பட வேண்டிய இடத்தில் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
- 30 தொடக்கம் 56 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |

| முதலாவது பரீட்சகர் | ஒப்பம் |
|---|---|
| புள்ளி வழங்கும் விதிமுறைகளுக்கேற்ப மதிப்பீடு செய்யப்பட்டதென சான்றுப்படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர் | |
| முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியென சான்று பகர்கின்றேன். | |
| கணித பரீட்சகர் | |
| மதிப்பீடு செய்யப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன். | |
| பிரதம பரீட்சகர் | |
| மேற்பார்வை செய்ததற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன். | |

திரு.ஞா.ஞானதர்ஷன்,

ஆசிரியர்,

மட்/பட்/மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம்.

**1) கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு பந்தியிலிருந்து விடை தருக.**

இந்த ஒரு நாள் ஓய்வினைப் போல நீ ஒவ்வொரு வருடமும் ஒரு நாள் ஓய்வெடுத்துக்கொள். இந்த மூன்று நாட்களும் என் அம்மாவும் அப்பாவும் என்னுடன் மட்டுமே இருந்தார்கள். தொலைக்காட்சியும் இல்லை ; கைத் தொலைபேசியும் இல்லை ; மூன்று நாட்களும் ஒன்றாக விளையாடினோம். பழைய கதைகளைப் பேசினோம். புதிய கதைகளை உருவாக்கினோம். வானத்தினை இரசித்தோம். ஒன்றாக மூவரும் சமைத்தோம். மூவரும் ஒரே தட்டில் உண்டோம். இந்தப் பூமியில் உள்ள அனைத்துக் குழந்தைகள் சார்பாகவும் இந்தக் கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளவும்.

அ) இக் கோரிக்கையினை விடுத்தது யார் ?

........................................................................................................

ஆ) இளைப்பாறு என்பதற்கு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது எது ?

........................................................................................................

இ) பந்தியில் இடம்பெற்றுள்ள எதிர்க் கருத்துச் சோடியினை எழுதுக.

........................................................................................................

ஈ) உயர்திணைப் பன்மை இறந்தகாலப் படர்க்கைச் சொல்லினை எழுதுக.

........................................................................................................

உ) தொலைக்காட்சி என்பதனைப் பிரித்தெழுதுக.

........................................................................................................

ஊ) இப் பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடரினை எழுதுக.

........................................................................................................

(06 புள்ளிகள்)

**02) மிகச் சரியான சொல்லினைத் தெரிவு செய்க.**

ஆ) 1. பேலை 2. பேளை 3. பேழை

ஆ) 1. சிறுவராயம் 2. சிறுபராயம் 3. சிறு பிராயம்

(02 புள்ளிகள் )

**03) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லினை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

1. அடைப்பினுள் உள்ள நிறுத்தக் குறி ( , ) .............................. ஆகும்.
   ( முற்றுப் புள்ளி / காற் புள்ளி / ஆச்சரியக் குறி )
2. நாணம் என்பது .................................. எனப் பொருள்படும்.
   ( கயிறு / மானம் / வெட்கம் )
3. களை பிடுங்காத பயிர் ........................ஆகும்.
   ( காற் பயிர் / அரைப் பயிர் /முழுப்பயிர் )

(03 புள்ளிகள் )

**04) தரப்பட்ட வாக்கியத்திலுள்ள பிழைகளைத் திருத்தி சரியாக எழுதுக.**

எல்லா சந்தர்பங்களிலும் அடக்கமாக குரலை தாள்த்தி பேசுதல்.

......................................................................................................

(02 புள்ளிகள் )

**05) உரிய நிறுத்தக் குறிகளை இடுக.**

க கலையழகன்
இல - 40/ 02
மணற்சேனை
காரைதீவு
29.02.2024 (03 புள்ளிகள் )

**06) தரப்பட்டுள்ள இணைமொழியினைப் பூரணப்படுத்துக.**

அ) கணக்கு ……………………………………………………………………………...

ஆ) ஒட்டி ………………………………………………. ……………………………

(02 புள்ளிகள் )

**07)** பவளக்கொடி நின்று
சற்றுத் தலை நிமிர்ந்தாள்
**தையலென்ன** செய்வாள்

இப் பாடலில் இடம்பெற்றுள்ள தையல் என்பது ……………………………………….
(01 புள்ளிகள் )

**08) வாக்கியத்தினை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

முடிவை / பார்த்தே / கருமத்தின் / ஆராய்ந்து / செய்யும் / செய்ய வேண்டும் .

……………………………………………………………………………………………..

(02 புள்ளிகள் )

**9) இடைவெளியில் உரிய பால்களுக்கான சொல்லினை எழுதுக.**

அ) விழுந்தாள் - பலவின்பால் - ……………………………………………………..

ஆ) குளிக்கின்றனர் - ஆண்பால் - ………………………………………………………

(02 புள்ளிகள் )

**10) காலத்தின் ஒரு வரலாற்றுச் சுருக்கம் எனும் அறிவியல் நூலின் ஆசிரியர்**
……………………………………………………………………………………………
(01 புள்ளிகள் )

**11) தரப்பட்ட ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்க.**


1. I will come ……………………………………….. ( yesterday / tomorrow)

2. I am …………………………………………….. (drinking / reading ) water.

(02 புள்ளிகள்)

12) படங்களுக்குரிய ஆங்கிலச் சொல்லினை எழுதுக.


............................


...........................

(02 புள்ளிகள்)

13) தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களின் கருத்தினை தமிழில் எழுதுக.

அ) (G)குவன் விதுலி - ......................................................................

ஆ) மல் - ......................................................................

(02 புள்ளிகள்)


14 தொடக்கம் 26 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட வெற்றிடங்களில் விடையினை எழுதுக.

14) 9001 இவ் எண்ணின் எண் பெயர் ..........................................................

(02 புள்ளிகள்)

15) எண் சட்டத்தில் விடை தருக.




+


= ..................................... (02 புள்ளிகள்)

16) இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக.

**0.51 , 0.25 , 1.37 , 0.05 , 0.5** ..........................................................

(02 புள்ளிகள்)

17) 

அ) நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னம் ?

.................................................................................................................

ஆ) நிழற்றப்படாத பகுதி நிழற்றிய பகுதியை விட எத்தனை மடங்கு அதிகம் ?

.................................................................................................................

(04 புள்ளிகள்)



18) கழிக்குக.

அ) $1 - 6/8$ = ..........................................................................

ஆ) $3/6 - 1/4$ = ..........................................................................

(04 புள்ளிகள்)

**19) சமச்சீர் அச்சுக்களை வரைக.**

**அ)**  **ஆ)** 

(04 புள்ளிகள்)

**20)** அரியம் ஒன்றின்

அ) முகங்களின் எண்ணிக்கை **……………………………………………………………..**

ஆ) விளிம்புகளின் எண்ணிக்கை **…………………………………………………………….**

(02 புள்ளிகள்)

**21) விலைப் பட்டியலை அவதானித்து இடைவெளியினைப் பூர்த்தி செய்க.**

| **பொருள்** | **1kg இன் விலை** | **அளவு g இல்** | **விலை** | |
|---|---|---|---|---|
| | | | **ரூபாய்** | **சதம்** |
| எள்ளு | 115.00 | 750 g | | |
| கடலை | ……….. | 1500 g | 405 | 00 |
| அவல் | 550.00 | ……….. | 1100 | 00 |
| மொத்தம் | ………. | ………. | ……. | …… |

(06 புள்ளிகள்)

**22)**

| **கிராமம்** | **H** | **I** | **J** | **K** |
|---|---|---|---|---|
| **குடும்பங்கள்** | **218** | **1765** | **229** | **396** |

**அ)**

I கிராமத்தில் உள்ள குடும்பங்கள் ஏனைய குடும்பங்கயை விட எவ்வளவு அதிகம் ?

**………………………………………………………………………………………**

ஆ) எவ் இரு கிராமங்களில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையின் வித்தியாசம் 167 இலும் அதிகம் ?

**…………………………………………………………………………………….**

(04 புள்ளிகள்)

**23)** நிஹார்தி கதைப் புத்தகமொன்றினை பி.ப 5.50 இற்கு வாசிக்கத் தொடங்கி 35 நிமிடங்களின் பின்னர் அவள் எட்டு நிமிடங்கள் ஓய்வெடுத்தாள். பின்னர் தொடர்ந்து கதையினை தொடர்ச்சியாக 42 நிமிடங்கள் வாசித்து முடித்தாள்.அவள் வாசித்து முடித்த நேரத்தினை டிஜிற்றல் நேரத்தில் எழுதுக……………………………………

(02 புள்ளிகள்)

- **24 தொடக்கம் 53 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

**24)** மிக அரிதாக வானில் தென்படுவது

1. உடு 2. வால்வெள்ளி 3. விமானம்

**25)** கலவத்தன் என அழைக்கப்படும் இலங்கைக்குரிய முலையூட்டி

1. சுண்டெலி 2. கருங்குரங்கு 3. மரநாய்

**26)** சீடர்களின் பாதந் தோய்த்தல் செயற்பாட்டினை மத குருவானவர் செய்யும் பழக்கத்தினை யுடைய மதத்தினர்

1. இஸ்லாமியர் 2. இந்துக்கள் 3. கிறிஸ்தவர்கள்

**27)** கல்லீரல் அழற்சிக்குப் பிரதான காரணம்

1. சீனி அதிகளவான தேநீர் அருந்துதல்.
2. அசுத்த நீரைப் பருகுதல்.
3. குளிரான பானங்களை கொதிக்க வைத்துப் பருகுதல்.

28) உவர்ச் சூழலில் வளரும் தாவரம் உணவில் எப்போசணைக் கூறுக்காக அதிகம் பயன்படுகின்றது.

1. காபோவைதரேற்று 2. அயடீன் 3. விற்றமின் D

29) இலங்கையில் அனல் மின் வலுச் சக்தியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத் தப்படுவது

1. காற்று 2. நிலக்கரி 3. விறகு

30) பாடசாலையில் உள்ள பண்டங்கள் , உபகரணங்கள் தொடர்பான விபரங்களடங்கிய ஆவண ஏடு

1. சம்பவத்திரட்டுப் புத்தகம் 2. புள்ளிப் பதிவேடு 3. பொருட்பதிவேடு

31) பல்பொருள் வாணிப நிலையங்களில் பாதுகாப்பான பரிமாற்றலுக்காக பயன்படுத்த முடியாதவை

1. கடன் அட்டை , காசோலை
2. நாணயத்தாள்கள் , நாணயக் குற்றிகள்
3. வவுச்சர்கள் , விசா அட்டைகள்

32) போலியான பண்டங்கள் விற்பனை செய்யப்படுகின்றனவாயின் அதிலிருந்து பாதுகாப்புப் பெற அதனைத் தெரியப்படுத்தவேண்டியது

1. பொதுச் சுகாதார உத்தியோகத்தர் பணிமனை
2. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை
3. பிரதேச சபை

33) சுவர்களிலுள்ள கரடு முரடான மேற்பரப்பினை ஒப்பமாக்க பயன்படுவது

1. மணல்தாள் 2. அரத்தாள் 3. படியரம்

34) பண்டைக் காலத்தில் எமது முன்னோர்கள் உபகரணங்களைப் பயன்படுத்த முதலில் செய்யாதது
   1. அவற்றை வணங்குதல் மூலம் அவற்றுக்கு மரியாதை செலுத்தியமை
   2. அவற்றிற்குப் பொருத்தமான பிடிகளைப் போட்டுப் பயன்படுத்தியமை
   3. இலகுவாகப் பயன்படுத்துவதற்காக செயற்கை சக்தி முதல்களைப் பயன்படுத்தியமை

35) நிதஹஸே மந்த்ரய மற்றும் லங்கா மாதா எனும் நூல்களை எழுதியவர்
   1. கலாயோகி அனந்த குமாரசுவாமி 2.ஆதர் சி கிளார்க் 3. வண எஸ் மகிந்த

36) பின்வருவனவற்றுள் கஞ்சற் கருவி
   1. வயலின் 2. சல்லாரி 3. தபேலா

37) ஆடம்பரமான வாழ்க்கைக் கோலத்தினால் ஏற்படக்கூடிய விளைவுக்குப் பொருந்தாதது
   1. ஓய்வின்மை 2. நிம்மதி இழத்தல் 3. கடனின்றிய வாழ்க்கை

38) தெற்கு , சப்ரகமுவ ,மேற்கு மாகாணங்களில் பாதிப்பினை உண்டுபண்ணும் காற்று
   1. வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று 2. தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று
   3. புயல் காற்று

39) 

சுற்றாடல் நேய நிலைபேறான அபிவிருத்தியில் 3R எண்ணக்கரு முக்கியமானது இதன் ஒழுங்கு முறையில் மிகச் சரியானது

   1. பயன்பாட்டைக் குறைத்தல் , மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல், மீளப் பயன்படுத்துதல்.
   2. மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல், மீளப் பயன்படுத்துதல் , பயன்பாட்டைக் குறைத்தல்.
   3. பயன்பாட்டைக் குறைத்தல், மீளப் பயன்படுத்துதல், மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல்.

40) வடக்கு அதிவேகப் பாதை (A9) வீதி எனக் கூறப்படுகின்றது. இப்பாதைக்குரிய அதிவேகப் பாதைக் குறியீடு
   1. E 03 2. E 04 3. E 05

41) எமது நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மிக முக்கிய காரணியாக அமைவது
   1. நாட்டு மக்கள் சோம்பேறிகளாக இருந்தமை
   2. நாட்டிலுள்ள விவசாயிகள் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட மறுத்தமை
   3. அரசு திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி வெலைகயை முன்னெடுக்காமை

42) பயணி ஒருவர் பேருந்தினுள் இருந்த வெளியே இறங்கும்போது எப்பக்க வாசல் வழியாக மட்டும் கட்டாயமாக இறங்கவேண்டும்

   1. பின்பக்க வாசல் 2. முன்பக்க வாசல் 3. ஏதாவத ஒரு வாசலினால்

43) மூன்றாம் வகை நெம்புகோல் வகையினைச் சேர்ந்தது
   1. கத்தரிக்கோல் 2. விளக்குமாறு 3. கதவு

44) தொற்று நோய்களில் ஒன்று
   1. புற்றுநோய் 2. விசர்நாய் கடி 3. பாரிசவாதம்

45) சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவரக்கு ஏற்படாதது.

1. சமூகத்தினர் பாராமுகமாக இருத்தல்
2. ஊளவியல் ரீதியான பாதிப்பு
3. நுன்மதிப்பு ஏற்படுத்ததல்

46) கடைவாய் அவிதலுக்கு எப்போசணைக் குறைபாடு காரணமாக அமைகின்றது

1. விற்றமின் C  2. விற்றமின் D  3. விற்றமின் A


47) வீட்டிலுள்ளோரில் ஒருவர் மாத்திரம் பயன்படுத்தாதது.


1. குடை  2. மூக்குக் கண்ணாடி  3. பற்றூரிகை


48) மாமிசத்தினை மட்டும் உண்ணும் உயிரினம்

1. ஆடு  2. ஆந்தை  3. ஏலி

49) காந்தங்கள் இரண்டினை அருகருகே வைக்கும்போது ஒன்றையொன்று தள்ளும் சந்தர்ப்பம்

1. 


2. 


3. 


50) சூரிய ஒளியின் பயனாக அமையாதது

1. மின் உற்பத்தி  2. உப்பு உற்பத்தி  3. பவள மல்லிகை மலர்தல்

51) பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைக்காதது.

1. சீருடை  2. போக்குவரத்து  3. பாடநூல்

52) இலங்கையில் மூன்று மாவட்டங்களைக் கொண்டிராத மாகாணங்களின் எண்ணிக்கை

1. 04  2. 01  3. 05

53) தொற்று நோய்கள் அதிகம் பரவி இறப்பதற்கு காரணமாக அமையும் இயற்கை அனர்த்தம்

1. சூறாவளி  2. புவி நடுக்கம்  3. வெள்ளப்பெருக்கு

( 30 புள்ளிகள் )

54) இன்றைய பொருளாதார கஸ்டத்தினைப் போக்க வீட்டுத்தோட்டம் செய்வது பயனுள்ளது. வீட்டுத்தோட்டத்தின் பயன்கள் எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக.(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறுதல் வேண்டும்.எழுவாய்,பயனிலை தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியானதாக அமைதல் வேண்டும்)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

( 06 புள்ளிகள் )